# மின்சாரக் கட்டணத்தை உடனடியாகக் குறைத்து இலாபத்தின் பலனை மக்களுக்குக் கொடுங்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் மன்றில் வலியுறுத்து

இந்த ஆண்டுக்கான முதல் நாடாளுமன்ற அமர்வு இன்று காலை ஆரம்பமானது.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச உட்பட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கறுப்பு நிற ஆடை அணிந்து மன்றத்திற்கு இன்று வருகை தந்துள்ளனர்.

வற் வரியை 18 சதவீதத்தால் அரசு உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கறுப்பு உடை அணிந்து பாராளுமன்றத்திற்கு வருகை தந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

அதையடுத்து நாடாளுமன்றில் இன்று உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சட்டவிரோதமான மற்றும் நியாயமற்ற முறையில் மின் கட்டண அதிகரிப்புக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

மதிப்பிடப்பட்ட நீர்மின் உற்பத்தியின் அளவு (3,750 முதல் 4,510 ஜிகாவாட்) அதிக உற்பத்திச் சுட்டியை எட்டியமை, மின்சாரத் தேவை குறைவு (400 ஜிகாவாட்) மற்றும் அனல்மின் நிலைய செயலிழப்பு போன்றவற்றால் 26 பில்லியனும், 18 வீத மின்கட்டண அதிகரிப்பால் மேலும் 26 பில்லியனும் உட்பட மொத்தம் 52 பில்லியன் இலாபத்தை இலங்கை மின்சார சபை ஈட்டியுள்ளதாகவும், எனவே அரசாங்கம் உடனடியாக மின்சாரக் கட்டணத்தை குறைக்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி தலைவர் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

குறித்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாகச் செயற்படாதிருந்தால், உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பின் மூலம் இந்த இலாபத்தை மின் பாவனையாளர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். 2 ▶



மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் - 01 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 19 செவ்வாய்க்கிழமை 09.01.2024 கதிர் 154

14ஆவது
யாழ் சர்வதேச
வர்த்தகக் கண்காட்சி
முற்றவெளி
மைதானத்தில்
JANUARY
19 | 20 | 21
JITF 2024
14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

## டலஸ்க்கு நாமல் மீண்டும் அழைப்பு

“நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும எமது முகாமில் இருக்க வேண்டிய அரசியல் தலைவர். அவருடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு மீண்டும் முயற்சிப்போம்” - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது, 2 ▶

## எம்.பியாகின்றார் நயன வாசலதிலக



ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி பதவி விலகியதையடுத்து வெற்றிடமாகியுள்ள எம்.பி. பதவிக்கு நயன வாசலதிலக நியமிக்கப்படவுள்ளார்.

அவர் கடந்த 2020 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப் படுத்தி 31 ஆயிரத்து 307 வாக்குகளைப் பெற்றிருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த சமிந்த விஜேசிறி நாடாளுமன்றத்தில் இன்று விசேட அறிக்கை ஒன்றை விடுத்து தனது எம்.பி. பதவியை இராஜிநாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் முல்லைத்தீவில் போராட்டம்!



பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவியை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி, இன்று முல்லைத் தீவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது

ஜனாதிபதி வடக்கிற்கான விஜயத்தினை மேற்கொண்டபோது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் இணைந்து தங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையோடு வவுனியா நகரசபைக்கு முன்பாக போராட்டம் நடாத்தியிருந்தனர்.

இந்தப் போராட்டத்தையடுத்து வவுனியா மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத் தலைவி உள்ளிட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தமை, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி வரை அவர்களை விளக்கமறியல் வைக்குமாறு வவுனியா மாவட்ட நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த நிலையில், இவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முல்லைத்தீவில் இன்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. (04)



## மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்தின் தேர் இன்று!

யாழ்ப்பாணம், மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் இரதோற்சவப் பெருவிழா இன்று காலை இடம்பெற்றது.

## தமிழக அரசின் அழைப்பில் மனோ சென்னை பயணம்



தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இம்மாதம் 11, 12 ஆம் திகதிகளில் சென்னையில் உலகத் தமிழர் விழா நடைபெறவுள்ளது.

இந்த விழாவில், தமிழக அரசின் அழைப்பையேற்றுக் கலந்துக்கொள்வதற்காகத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் இன்று சென்னைக்குப் பயணித்துள்ளார். (அ)

## ஹூதி கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்த நாட்டின் பணத்தைச் செலவிடும் ஜனாதிபதி

### சபையில் சஜித் குற்றச்சாட்டு



”நாட்டில் பல பிரச்சினைகள் நிலவும் போது ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க ஹூதி கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டின் பணத்தைச் செலவிடுகின்றார்” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் இன்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சஜித் பிரேமதாஸ,

“நாட்டில் பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குத் தினசரி உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது. இளைஞர்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டு மக்கள் இவ்வாறு துன்பப்படும்போது நாட்டின் பணத்தில் இருந்து 25 கோடி ரூபா செலவளித்து கடற்படையின் கடற்படைக் கப்பலை ஹூதி கிளர்ச்சிக் குழுவினரை ஒடுக்குவதற்காக அனுப்ப அரசு தீர்மானித்துள்ளது. இது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

நாட்டின் அத்தியாவசிய உள்ளக நடவடிக்கைகளுக்காக இருக்கும் பணம் ஹூதி கிளர்ச்சிக் குழுவினரை 2 ▶

# தனியார் பேருந்துச் சாரதிகளும் நடத்துனர்களும் சீர்திருத்தப் பயிற்சிக்காக அனுப்பி வைப்பு

மேல் மாகாணத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் பணிபுரியும் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் மீது கடந்த ஆண்டில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட பயணிகளின் புகார்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக மேல் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் டபிள்யூ. பிரசன்ன சஞ்சீவ தெரிவித்துள்ளார். இதன்படி, குற்றம் செய்ததாக அடையாளப்படுத்தப்பட்ட ஆயிரத்து இருநூறு பேருந்து நடத்துனர்கள் மற்றும் சாரதிகளின் சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத் தப்பட்டுள்ளதாகவும், அவர்கள் அதிகாரசபையால் சீர்திருத்தப் பயிற்சிக்காக அனுப்பப் பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பயணிகளுக்கு டிக்கெட் கொடுக்காமை, மிச்சக் காசு கொடுக்காமை, அவதானமின்றி பேருந்துகளை செலுத்தியமை, ஏட்டிக்குப் போட்டியாக பேருந்துகளை செலுத்தியமை, பயணிகளை தகாத வார்த்தைகளால் ஏசியமை, மந்த கதியில் பேருந்துகளை செலுத்தியமை போன்ற குற்றங்களின் பேரில் மேற்படி நடத்துனர்கள் மற்றும் சாரதிகளின் மீது பயணிகள் புகார் அளித்துள்ளதாகவும் பிரசன்ன சஞ்சீவ மேலும் தெரிவித்துள்ளார்.

பேருந்துகளில் இவ்வாறு ஏதேனும் அநீதிகள் இழைக்கப்பட்டால் 0112-860860 என்ற எண்ணிற்கு தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ரெத-25)

## இருக்குமிடத்தில் இருந்தவாறே TIN இலக்கத்தை பெறலாமாம்

வரி செலுத்துவோரை அடையாளம் காண நிதி அமைச்சியினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள TIN இலக்கத்தை எந்தவொரு நபரும் அலுவலகத்திற்கு வராமலேயே தமது ஸ்மார்ட் போன், கணினி மூலமாகவோ அல்லது கொமியூனிகேஷன் நிலையங்கள் ஊடாகவோ பெற்றுக்கொள்ள முடியும் என உள்நாட்டு வருமானவரி சங்கத்தின் இணைச் செயலாளர் எச்.ஏ.எல். உதயசிறி தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் www.ird.gov.lk சேவையின் ஊடாகவும் TIN இலக்கத்தை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் குறிப்பிட்ட அவர், தேசிய அடையாள அட்டையின் இரு பக்கங்களையும் ஸ்கேன் செய்து, அடையாள அட்டை இலக்கம், முழுப் பெயர், வதிவிட முகவரி ஆகியனவற்றை பதிவேற்றம் செய்து வுஜே இலக்கத்தைப் பெறுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதற்கமைய TIN இலக்கம் தபால் மூலம் பெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும், உரிய இலக்கம் உடனடியாகத் தேவைப்பட்டால் வருமானவரி அல்லது உப வருமானவரி அலுவலகத்திற்குச் சென்று தமக்கான இலக்கத்தை பெறலாம் எனவும் இணைச் செயலாளர் உதயசிறி மேலும் தெரிவித்துள்ளார்.

அடையாள அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் ஒருவர் வசிக்கவில்லை என்றால், அவர் வசிக்கும் வீட்டில் அவரது பெயரில் ஏற்றுக் கொள்ளக்கூடிய பில் கட்டணப் பட்டியலை (நீர், மின்சாரம், தொலைபேசி போன்றவை) சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ரெத-26)

# நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜிநாமா செய்த சமிந்த விஜேசிறி

ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி எம்.பி. பதவியிலிருந்து இராஜிநாமா செய்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று விசேட அறிக்கையொன்றை விடுத்த பின்னர் சமிந்த விஜேசிறி தனது பதவி விலகலை அறிவித்தார்.

பதவி விலகல் கடிதம் சபாநாயகரிடம் கையளிக்கப் பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மக்கள் விரும்பும் நாடாளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்றும் சமிந்த விஜேசேகர வலியுறுத்தினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தன்னைத் தந்தையாகவே வழி நடத்தினார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)



# தரமற்ற இம்யூனோகுளோபியுலின் தடுப்பூசி விநியோகித்த நிலையத்தில் கடும் சோதனை

சுகாதார அமைச்சின் கீழுள்ள சுகாதார விநியோகத் துறைக்கு தரமற்ற இம்யூனோகுளோபியுலின் எனப்படும் தடுப்பூசிகளை வழங்கிய நிறுவனத்தின் உற்பத்தி நிலையம் மற்றும் ஆய்வகம் ஆகியனவற்றை தேசிய மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அதிகாரிகள், சுகாதார அமைச்சின் விசேட மருத்துவ நிபுணர்கள், குற்றப் புலனாய்வு ஆய்வு கூடத்தின் (SOCO) அதிகாரிகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நேற்று (08) கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தினர்.

சீதுவ நகரில் அமைந்துள்ள மருந்துகளை விநியோகம் செய்யும் மேற்படி நிறுவனத்தின் உற்பத்தி நிலையம் மற்றும் பரிசோதனை ஆய்வகத்தை முழுமையாக ஆய்வு செய்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்கவின் உத்தரவின்படி, தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அந்த நிறுவனத்தின் உரிமையாளர் சுதத் ஜானக பெர்னாண்டோ முன்னிலையில் இந்த சோதனை நடத்தப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகள் சந்தேக நபரை குறித்த உற்பத்தி நிலையத்திற்கு அழைத்து வந்த பின்னர், அவர் முன்னிலையிலேயே பல மணிநேரங்களாக மேற்படி சோதனைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ரெத-24)

## ஹுதி கிளர்ச்சியாளர்களைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒடுக்குவதற்கு அனுப்பப்படும் வகையில், நாட்டின் கடனில் இருந்து குறைந்தது 25 பில்லியனையாவது குறைப்பதாக வெளிநாடுகள் உறுதியளித்துள்ளனவா என்பதை அறிய விரும்புகின்றோம். இதனால் என்ன பலன் என்று கேள்வி எழுப்புகின்றோம்." - என்றார். (அ)

## டலஸ்க்கு நாமல் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"டலஸ் அழகப்பெரும எமது முகாமில் இருக்க வேண்டிய அரசியல் தலைவர். அவருடன் பேச்சு நடத்தி ஒரு இணக்கப்பாட்டுக்கு வரலாம் என நம்புகின்றேன். இது எனது கருத்தே தவிர கட்சியின் கருத்து அல்ல. 2005 இல் மஹிந்த ராஜபக்ச வெற்றி பெற டலஸ் அழகப்பெரும பெரும் பாடுபட்டார். அவர் எம்மைப் போல் இடதுசாரி பொருளாதார சிந்தனை கொண்டவர்." - என்றார். (அ)

## மின்சாரக் கட்டணத்தை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரையில் 8 இலட்சம் மக்களின் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சபையில் சுட்டிக் காட்டினார்.

52 பில்லியனை இலாபமாகப் பெற்றிருக்கும் நேரத்தில் இதன் பலன் மின் பாவனையாளர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும், மின் கட்டணத்தைக் குறைக்கும் எந்த விதத் திட்டமும் மின்சார சபையிடம் இல்லை என்று இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கூட கூறியுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக் காட்டினார். (04)




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

# பிரதேச மட்ட குடும்ப நல்லிணக்க சபை சேவை வழங்குனர்களுக்கான செயலமர்வு



(நூருல் ஹுதா உமர்)

அம்பாரை மாவட்டத்தில் காதிமன்றங்கள் அமைந்துள்ள 8 பிரதேசங்களிலும் பிரதேச மட்ட குடும்ப நல்லிணக்க சபை அமைத்து அதனூடாக முஸ்லிம் விவாக விவாகரத்து தொடர்பான பிரச்சினைகள் மற்றும் முறைப்பாடுகள் ஆராயப்பட்டு அவற்றுக்கான உரிய முறையில் சரியான வழிகாட்டல் ஆலோசனை சேவைகள் மற்றும் இணக்கப்பாடுகளை பெற்றுக்கொடுப்பதன் மூலமாக காதி நீதிமன்றங்களின் சேவைகளை இலகுபடுத்துவதோடு ஏனைய சேவை வழங்குனர்களின் பங்கேற்புடன் நிலைபேறான வினைத்திறனான சேவைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் செயலமர்வு இறக்காமம் பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் நேற்று திங்கட்கிழமை பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கே. நிஹால் அஹமட் அவர்களின் ஒருங்கிணைப்பில் வளவாளராக கலந்து சிறப்பித்த கலாநிதி ரஊப் செய்ன் அவர்களினால் வளப்பகிர்வு இடம்பெற்றது.

அதில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் பற்றிய அறிமுகம், அதன் சீர்திருத்தம் தொடர்பான வரலாற்று பின்னணி மற்றும் அதன் தற்போதைய பிரயோக சவால்களும், முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தை அமுல்படுத்துவதில் காதி நீதிமன்றங்களை வலுப்படுத்துவதிலும் திருமண நிகழ்வுகளை முறைப்படுத்துவதிலும் சமூக மட்ட பங்குதாரர்களின் பொறுப்புக்களும் வகிபங்கும்.

குடும்ப நல்லிணக்க சபை ஒன்றின் தேவைப்பாடும் அதன் வகிபாகமும், குடும்ப வாழ்வில் பாதிப்புற்று நலிவுறும் பெண்கள் குழந்தைகளைப் பாதுகாத்தலுக்கும், காதி நீதிமன்றங்களின் கண்ணியத்தைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கான சமூகத்தின் பொறுப்புணர்வை அதிகரிக்கும் திட்டம் தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் கே. நிஹால் அஹமட் அவர்களினால் பிரதேச மட்ட குடும்ப நல்லிணக்க சபை தொடர்பான அறிமுகம் வழங்கப்பட்டு இறக்காமம் பிரதேசத்திற்கான சபை தெரிவுசெய்யப்பட்டது. மேலும் அவற்றின் அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுரை வழங்கிவைக்கப்பட்டது.

இச்சபையினூடாக, பிரதேசத்தில் தீர்க்க முடியுமான குடும்ப பிரச்சினைகளுக்கு தீர்வு காணல் மற்றும் அவற்றுக்கான ஆலோசனைகள் வழிகாட்டல்களை வழங்கல், தீர்க்க முடியாத பிரச்சினைகளை காதி நீதிமன்றத்திற்கு எடுத்து செல்லல், திருமணத்திற்கு முன்னரான ஆலோசனைகள், பின்னரான ஆலோசனை சேவைகளை வழங்கல், நேரடியாகவோ அல்லது காதி நீதிமன்றங்கள் ஊடாகவோ கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசா ரித்து நல்லிணக்கத்தை ஏற்படுத்தல், பிரதேச மட்டத்தில் குடும்ப பிணக்குகள் மற்றும் விவாகரத்து தொடர்பான முறைப்பாடுகளுக்கு விரைவாக நல்ல தீர்வினை பெற் றுக்கொடுப்பதே இக் கட்டமைப்பின் நோக்கமாகும்.

குறித்த செயலமர்வில் காதி நீதவான் சட்டத்தரணி எஸ்.எல். பாறூக், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச். றகீப் உட்பட பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், பிரதான ஜும்ஆ பள்ளிவாசல் பிரதிநிதிகள், பிரதேச திருமண பதிவாளர்கள், ஜம்மியதுல் உலமா சபை, கிராம சேவை உத்தியோகத்தர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பொறுப்பாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலையில் இருந்து கொழும்புக்கு விரைவு புகையிரத சேவை ஆரம்பமானது

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை புகையிரத நிலையத்தில் இருந்து இன்று பிற்பகல் 12.35 க்கு கொழும்பு புகையிரத நிலையம் நோக்கி செல்லும் விரைவு புகையிரத சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை புகையிரத நிலைய அதிபர் சர்வேஸ்வரனின் அவர்களின் அழைப்பின் பேரில் Trinco Aid இன் பணிப்பாளர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார். அதேவேளை திருகோணமலை புகையிரத நிலையம் Trinco Aid இன் எண்ணத்தில் பசுமை புகையிரத நிலையமாக உருவாக்கப்பட்டு வருகின்றது.

இப்பசுமை நிலையமானது Lion Club of Trincomalee Town, Lion Club of Centennial Paradise ஆகியவற்றின் அனுசரணையோடும் கிழக்கு மாகாண சுற்றுலாத்




துறையின் ஆதரவோடும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.



# உக்ரைன் மீது ரஷ்யா மீண்டும் தீவிர எறிகணைத் தாக்குதல்



உக்ரைன் முழுவதும் ரஷ்யா நேற்று அதிகாலை மீண்டும் தீவிர எறிகணைத் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் 5 பேர் உயிரிழந்துள்ளதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இது குறித்து அந்த நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் தகவல் வெளியிட்டபோது, உக்ரைனின் பல்வேறு பகுதிகளில் ரஷ்யா சரமாரியாக ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது.

திங்கட்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட அந்தத் தாக்குதலில் நகரப் பகுதிகள் குறிவைக்கப்பட்டன. இதில் வீடுகள், வணிக வளாகங்கள் உள்ளிட்டவையும் சேதமடைந்தன.

நீப்ரோபெட்ரோவ்ஸ் பிராந்தியத்தின் க்ரீவ்யிரீ நகரில் நடத்தப்பட்ட ஏவுகணை வீச்சில் ஒரு பெண் உயிரிழந்ததோடு, 24 பேர் காயமடைந்தனர்.

கெல்னிட்ஸ்கி பகுதியில் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் மேலும் 2 பேர் உயிரிழந்தனர். கெர்சான் பகுதியில் ரஷ்யா நடத்திய எறிகணைத் தாக்குதலில் 2 பேர் கொல்லப்பட்டனர் என்று அதிகாரிகள் கூறினர்.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி மாதம் படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்குப் பிராந்தியங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது. அந்தப் பிராந்தியங்களில் எஞ்சியுள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக ரஷ்யாவும், இழந்த பகுதிகளை ரஷ்யாவிடமிருந்து மீட்க உக்ரைனும் நடத்தி வரும் போர் அண்மைக் காலத்தில் மந்தமாகிவிட்டதாகக் கூறப்பட்டது.

இந்த நிலையில், உக்ரைன் நகரங்களில் அதிக தீவிரத்துடன் ரஷ்யா கடந்த மாத இறுதியில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது. அதற்குப் பதிலடியாக, ரஷ்யா மீது ட்ரோன்களை ஏவிய உக்ரைன், ரஷ்ய எல்லை நகரான பெல்கராட் மீது கடுமையான எறிகணைத் தாக்குதல் நடத்தியது. இதில் 10 பேர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளிவந்தன.

அதற்கு எதிர்வினையாக உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருகிறது. (04)

## வெள்ளை மாளிகையின் கதவின் மீது மோதிய வாகனத்தினால் பரபரப்பு




அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் வெளிப்புற கதவின் மீது வாகனம் ஒன்று மோதியதால் நேற்று மாலை பரபரப்பு ஏற்பட்டது.

இந்த விபத்தின் போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வெள்ளை மாளிகையில் இல்லை. வெள்ளை மாளிகை கதவின் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநரை பாதுகாப்புப் படையினர் கைது செய் துள்ளனர்.

இதுகுறித்து வெள்ளை மாளிகையை பாதுகாக்கும் அமெரிக்க ரகசிய சேவையின் செய்தித் தொடர்பாளர் ஆண்டனி குக்லீல்மி வெளியிட்ட சமூக வலைத்தளப் பதிவில்,

“உள்ளூர் நேரப்படி மாலை 6 மணியளவில் வெள்ளை மாளிகையில் வெளிப்புற கதவின் மீது ஒரு வாகனம் மோதியது. அந்த வாகனத்தின் ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த மோதலுக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது” என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இது விபத்தா அல்லது திட்டமிடப்பட்ட சதியா? என்பது குறித்து பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

உச்சகட்ட கண்காணிப்பின் கீழ் இருக்கும் வெள்ளை மாளிகையில் இது போன்ற சம்பவம் அரங்கேறியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (04)

## பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து



பங்களாதேஷ் பிரதமராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஷேக் ஹசீனாவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷின் 12 ஆவது நாடாளுமன்ற தேர்தல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி தேர்தலைப் புறக்கணித்த நிலையில், பிரதமர் ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் கட்சி, மொத்தமுள்ள 300 தொகுதிகளில் 223 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பங்களாதேஷில் கடந்த 2009 இலிருந்து ஆட்சியில் இருக்கும் ஷேக் ஹசீனா, தொடர்ந்து 4 ஆவது முறையாகப் பிரதமராகிறார்.

இதையொட்டி, ஷேக் ஹசீனாவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

டாக்காவில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தியாவுடனான நட்புறவு குறித்து பிரதமர் ஷேக் ஹசீனாவிடம் கேள்வியெழுப்பட்டது. இதற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் ஹசீனா, ‘பங்களாதேஷின் மிகச் சிறந்த நட்பு நாடு இந்தியா. 1971 விடுதலைப் போரின்போது பங்களாதேஷ்க்கு இந்தியா மிகவும் உறுதுணையாக இருந்தது.

1975 இலும் இதே ஆதரவைத் தொடர்ந்து அளித்தது. எனக்கும் என்னுடைய குடும்பத்தினருக்கு அவர்கள் பாதுகாப்பு அளித்தனர்’ என்றார்.

கடந்த 1975 இல் ஓகஸ்ட் மாதம் பிரதமர் ஷேக் ஹசீனாவின் தந்தை ஷேக் முஜ்பூர் ரஹ்மான் மற்றும் அவரது தாய், 3 சகோதரர்களை ராணுவ அதிகாரிகள் கொலை செய்தனர். இதைத் தொடர்ந்து பங்களாதேஷிலிருந்து வெளியேறிய ஷேக் ஹசீனாவும் அவரது சகோதரி ரெஹனாவும் இந்தியாவில் 6 ஆண்டுகள் வசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (04)



# சேனநாயக்க சமுத்திரத்தின் 5 வான்கதவுகள் திறக்கப்பட்டு தண்ணீர் வெளியேற்றம்



(எம்.ஏ.றமீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக இம்மாவட்டத்தின் சேனநாயக்க சமுத்திரத்தின் வான்கதவுகள் ஐந்து திறக்கப்பட்டு அதன் மூலமாக நான்கரை அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால், அம்பாறை மாவட்டத்தின் தாழ் நிலப் பிரதேசங்கள் ஆபத்தான பகுதிகளாக அறிவிக்கப் பட்டுள்ளன, என அம்பாறை மாவட்ட அனர்த்த முகா மைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.எம்.றியாஸ் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக் கையில், கடந்த சில தினங்களாக அம்பாறை, மொன ராகலை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்களில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக அம்பாறை சேனநாயக்க சமுத்திரத்தின் நீர் மட்டம் வெகுவாக உயர்வடைந்துள்ளது. இதன் காரணமாக இச்சமுத்தரத் தின் 110 அடி கொள்ளளவின் 106 அடி நீர் தற்போது நிறைந்துள்ளது.

சேனநாயக்க சமுத்திரத்தில் நிறைந்து வரும் நீர் மட்டத்தினை குறைக்கும் வகையில் ஒரு செக்கனுக்கு 4900 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது. கல்லோயா ஆற்றின் மூலம் அதிகளவிலான நீர் வெளி யேற்றபட்டு வருவதனால் அம்பாறை மாவட்டத்தில் உள்ள ஆற்றினை அண்டிய பிரதேசங்கள் மற்றும் நீரோடைகள் போன்றவற்றின் அருகில் வசித்து வரும் மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

குறிப்பாக அக்கரைப்பற்று, இறக்காமம், அட்டாளைச் சேனை, ஆலையடிவேம்பு, சம்மாந்துறை, காரைதீவு, நிந்தவூர், சாய்ந்தமருது மற்றும் அம்பாறை ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தாழ்நிலப் பகுதிகளில் வசித்து வரும் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும் வெள்ள நிலைமையின்போது நீர் வாழ் உயிரினங்கள், விஷஜந்துக்களின் தாக்கம் போன்றன அதிகளவில் நிகழக்கூடிய நிலைமை காணப்படுவதனால் மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதிக மழை காரணமாக இம்மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட தாழ் நில விவசாயச் செய்கை பெரிதும் பாதிப்படைந்துள்ளன. இம்மாவட்டத்தின் நெற்செய்கை மற்றும் உப உணவுப் பயிர்ச் செய்கை போன்றவற்றுக் கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

இம்மாவட்டத்தின் கடற் பரப்பில் பலத்த காற்றுடனான மழை பெய்து வருவதனால் கடல் கொந்தளிப்புடன் காணப்படுகின்றது. இதன் காரணமாக இம்மாவட்டத் தில் கடற்றொழில் வெகுவாகப் பாதிப்படைந்துள்ள- துடன் சேனநாயக்க சமுத்திரத்தின் வான்கதவுகள் திறக்கப்பட்டதனைத் தொடர்ந்து நன்னீர் மீன்பிடித் தொழிலுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

## சம்மாந்துறைப் பிரதேச செயலகத்தில் சமுர்த்தி முகாமையாளர் பொறுப்பேற்பு



(நூருல் ஹுதா உமர்)

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராக சாய்ந்த மருது பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய எம்.எம். எம். முபாரக், சமுர்த்தி முகாமையாளராக பதவியுயர்வு பெற்று இன்று சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலக தலை மைப்பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், சம்மாந் துறை பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட முகா மையாளர் யூ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ. மஜீத், சம்மாந்துறை சமுர்த்தி வங்கிச் சங்க முகாமைத் துவப் பணிப்பாளர் எம்.ஐ. அன்சார், சாய்ந்தமருது சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் எம்.எஸ்.எம். நௌஷாத், சாய்ந்தமருது சமூக அபிவிருத்தி உதவியாளர் யூ.எல். ஜஃபர் சம்மாந்துறை சமுர்த்தி வலய உதவி முகாமையாளர் ஏ.அஸீஸ், சம்மாந்துறை கருத்திட்ட உதவியாளர் எம்.ஜுனைதீன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## எழுத்தாளர் லெட்சுமணன் முருகபூபதிக்கு அவுஸ்திரேலியாவில் கௌரவம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பிரபல எழுத்தாளர், மூத்த ஊடகவியலாளர், அவுஸ் திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம், இலங்கை மாணவர் கல்வி நிதியம் போன்றவற்றின் நிறுவன ருமான லெட்சுமணன் முருகபூபதி அவர்களுக்கு அவுஸ்திரேலியா, மெல்பேர்னில் இலக்கிய சேவைக் காக ஆற்றிவரும் சேவைக்காக அண்மையில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

பிரபல பேச்சாளர்கள், இலக்கியவாதிகள், கல்விமான் கள் கலந்து கொண்டு அன்னாரின் சாதனைகளையும் அவரது பல்வேறு படைப்புகளையும் பற்றி உரைகள் நிகழ்த்தி சிறப்பித்தனர்.

அருமையான ஒரு நிகழ்ச்சியை மிக அழகாகவும் நேர்த்தியாகவும் சட்டத்தரணி, கவிஞர் பாடுமீன் ஶ்ரீஸ்கந்தராஜா, பேராசிரியர் டொக்டர் கௌரி சங்கர் உட்பட ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் ஒழுங்கு செய் திருந்தனர்.

இந்நிகழ்வின் சட்டத்தரணி மரியம் மன்சூர் நளி முதீன், டொக்டர் சிஹாப்தீன் நளிமுதீன் ஆகியோரும் பங்கேற்றனர்.

## சம்மாந்துறையில் சிங்கள கற்கைநெறி ஆரம்பம்!



(வி.ரி.சகா)

அரச கரும மொழிகள் திணைக்களத்தால் நடாத் தப்படுகின்ற 150 மணித்தியாலங்களைக் கொண்ட சிங்கள கற்கை நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு சம்மாந்துறையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வு சம்மாந்துறை அல்அர்சத் மகாவித்தி யாலயத்தில் அதிபர் எம் அப்துல் றஹீம் தலைமையில் நடைபெற்றது. வலய சிங்களப் பாட வளவாளர் நாசிக் அலி இணைப்பாளராக செயற்பட்டார்.

பிரதம அதிதியாக சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா, கௌரவ அதிதியாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகா- தேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

சிங்களக் கற்கை நெறியின் விரிவுரையாளர் ஜெய சிங்க கலந்து கொண்டு இரு மொழிகளிலும் உரை யாற்றினார்.

சம்மாந்துறை வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ உத வியாளர்கள் என்று 100 பேர் இந்த 150 மணி நேர பயிற்சி நெறியில் கலந்து கொள்கின்றனர்.



# ஆயுர்வேதம் மற்றும் சுதேச மருந்து உற்பத்தி பொருட்களுக்கு 'வற்' வரியிலிருந்து விலக்கு

ஆயுர்வேதம் மற்றும் சுதேச மருத்துவ சிகிச்சைகளுக்கு பயன்படுத்தப்படும் அனைத்து விதமான மருந்து உற்பத்தி பொருட்களுக்கும் 'வெற் ' வரியிலிருந்து விலக்களிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக உள்ளூர் மருத்துவ இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி தெரிவித்துள்ளார். அத்துடன், உள்ளூர் சிகிச்சைக்காக இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களுக்கும் 'வெற் 'வரியில் விலக்களிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், மருந்துகளை பொதி செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களுக்கு 'வெற் ' வரி விதிக்கப்படும் எனவும் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர், உள்ளூர் மருந்து உற்பத்திகளுக்கு மேற்படி 'வெற்' வரிவிலக்கு அளிப்பதானது ஆயுர்வேதம் மற்றும் உள்ளூர் மூலிகை சிகிச்சைக்கு மக்களை இட்டுச் செல்வதை முக்கிய நோக்கமாக கொள்ளப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய முறையிலான மருத்துவர்களுக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் உள்ளூர் மருத்துவத்துறையை பாதுகாப்பதற்கும் என விசேட பணியகம் ஒன்றை அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ரெத-22)

# தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் துணையின்றி தனிமையில் வாடும் விலங்குகள் குறித்து கரிசனை

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் கூண்டுகளுக்குள் 15 விலங்குகள் தனித்து வாழ்ந்து வருகின்றன எனவும், மேலும் 35 விலங்குகள் ஆண் துணை இல்லாமலும் மற்றும் 21 விலங்குகள் பெண் துணை இல்லாமலும் இருப்பதாகவும் தேசிய கணக்காய்வு திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெஹிவளை மிருகக்காட்சிசாலையில் சுமார் 15 வருடங்களாக தனிமையில் வாழ்ந்து வந்த ஜப்பானிய குரங்கு, 2021 மார்ச் 9 ஆம் திகதி உயிரிழந்துள்ளதுடன், அந்த குரங்கின் பிரேத பரிசோதனையின் போது தனியாக வாழ்ந்து வந்தமையால் மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு புற்றுநோய்க்கு ஆளாகியே அக்குரங்கு மரணமடைந்ததாக தெரியவந்துள்ளது.

அதன்படி, விலங்குகளை தனிமைப்படுத்துவது அந்த விலங்குகளின் உடல் மற்றும் உள ஆரோக்கியத்தில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும் என கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நலன்புரி மூலோபாயங்களில் சேர்க்கப்பட்டுள்ள நெறிமுறை அமைப்பின்படி, மிருகக்காட்சிசாலையில் உள்ள விலங்குகளுக்கு அவற்றின் இயல்பான நடத்தைக்குத் தேவையான சூழலை தயார் செய்ய வேண்டும் என்பது ஒரு முக்கிய அம்சமாக காட்டப்பட்டுள்ளது.

இதனை சுட்டிக்காட்டி திணைக்களம் கேள்வியெழுப்பிய போது, இதனையிட்டு பல்வேறு சர்வதேச விலங்கு பரிமாற்ற திட்டங்களுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மிருகக்காட்சிசாலை நிர்வாகம் பதிலளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெத-23)






## தரம் 1 இல் இணையவிருந்த சிறுவன் லொறி விபத்தில் பரிதாப உயிரிழப்பு

லொறியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீடொன்றின் மீது வீழ்ந்ததில் 6 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, தினியாவல பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

பெலவத்தையில் இருந்து நெலுவ நோக்கிப் பயணித்த கொழுந்து லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த வீடொன்றின் மீது வீழ்ந்துள்ளது.

இதன்போது, வீட்டின் வாசலில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் வீழ்ந்த லொறிக்குள் சிக்கியுள்ளார்.

படுகாயமடைந்த சிறுவன் உடனடியாக மீகஹதென்ன வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழுந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

லொறியின் சாரதி மற்றும் உதவியாளரும் படுகாயமடைந்த நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

உயிரிழந்த மேற்படி சிறுவன் சர்வதேச பாடசாலையொன்றில் தரம் ஒன்றில் நேற்று இணையவிருந்தார். எனினும், துரதிஷ்டவசமாக விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தினியாவல பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்து தொடர்பில் தினியாவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கிராம அபிவிருத்தி சங்க தலைவர் சடலமாக மீட்பு



வவுனியா - வீரபுரத்தில் உள்ள கல்குவாரி ஒன்றில் இருந்து கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, வீரபுரம் பகுதியில் வசித்து வந்த குறித்த நபர் கால்நடைவளர்ப்பு மற்றும் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில் குறித்த நபரை கடந்த சனிக்கிழமை முதல் காணாமல்போன நிலையிலே நேற்று மாலை குறித்த நபர் விவசாய செய்கையினை மேற்கொள்ளும் காணிக்கு அருகில் உள்ள கல்குவாரி குழியில் உள்ள நீரில் மிதந்த நிலையில் சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சடலம் செட்டிகுளம் பொலிஸாரால் இரவு மீட்கப்பட்டதுடன், சடலத்தினை திடீர் மரண விசாரணை அதிகாரி க.ஹரிபிரசாத் பார்வையிட்டிருந்தார்.

3 பிள்ளைகளின் தந்தையான சுப்பையா மருதன் என்ற 78 வயதுடைய முதியவரே சடலமாக மீட்கப்பட்டவரார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை செட்டிகுளம் பொலிசார் முன்னெடுத்து வருகின்றனர்.

JRIDE
BEYOND THE ROAD

Safety and comfort are our concern

# ஜேரைட்
# JRIDE
## TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide



ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.

**நாங்கள் தயாராகிவிட்டோம்!**

**யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)**

உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.



DOWNLOAD PASSENGER APP

இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!

jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
Install
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
Install

இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!

YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE

GET IT ON Google Play
Download on the App Store



## SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி

**நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?**

**விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?**

எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.

**HOTLINE : 0706563213**

**JRIDE TAXI SERVICE**
**SPEED IT NET**
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

**மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.01.2024 இல் வெளியிடப்பெற்றது.